செ.வெ.எண்: 80 நாள்: 29.01.2017

# அன்னவாசலில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் எழிலுற கட்டப்பட்டு வருகிறது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் பேரூராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணியினை ஆய்வு செய்தும் மற்றும் புதிய பணிக்கான பூமிபூஜையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

தமிழகஅரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அன்னவாசல் பேரூராட்சியில் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையம் கட்டிட கட்டுமானப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் மேட்டுத்தெரு அருள்மிகு பகவதியம்மன் கோவில் கலையரங்கம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கான பூமிபூஜை துவக்கி வைக்கப்பட்டுள்ளதுடன் பொது நிதியின் கீழ் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சிறு மின் விசை இறைப்பான் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்துநிலையத்தில் 14 கடைகள், பேருந்து நிற்குமிடம், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம், குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, அலங்காரவளைவு, கழிவறை வசதி போன்ற பல்வேறு நவீன வசதிகளுடன் எழிலுற கட்டப்பட்டு வருகிறது. இந்த ஆய்வின் போது முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.ஆஷாராணி, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.